<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண். 135 /2016**

**வாக்குமூலம் பி.வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குருஜாலஜெயரா மையா | தொழில் | |
| த/பெ. | குருஜாலகிருபா லையா | வயது | 50/ 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 01.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

<u>குறுக்கு விசாரணை</u>

**(சாட்சிக்கு தெலுங்கு மொழி மட்டுமே முழுமையாக தெரியும் என்பதால் வழக்கிடை மனு எண் 1/25 படி தெலுங்கு மொழி அறிந்த வழக்கறிஞர் திரு. கே.ரமேஷ் என்பவர் மொழிபெயர்பாலராக நியமனம் செய்யபட்டு சாட்சியம் பதிவு செய்யபடுவதால் இந்த குறுக்கு விசாரணைனது கேள்வி பதில் வடிவத்தில் பதிவு செய்யபடுகிறது)**

1. கேள்வி – உங்களுக்கு தமிழ் எழுத படிக்க தெரியாதா ?
பதில் – இல்லை
2. கேள்வி – உங்களது பிறந்த முகவரி என்ன?
பதில் – 3/7/151 பாபிலால் பள்ளி கரிம் நகர், தெலுங்கானா மாநிலம்
3. கேள்வி – உங்களுக்கு தமிழ் நாடு மாநிலத்தில் முகவரி எதுவும் இருக்கிறதா?
பதில் – எனக்கு தனிப்பட்ட முகவரி இல்லை.
4.கேள்வி – தாவா 1 ம் பிரதிவாதி அசோக் என்னுடன் நெல் வியாபாரம் செய்தாரா?
பதில் – ஆம், செய்தார்.
5. கேள்வி – உங்களுக்கும் 1ம்பிரதிவாதி அசோக்கிற்கும் இடையில் தொழில் ரீதியாக கொடுக்கல் வாங்கல் உண்டா?
பதில் – உண்டு.
6. கேள்வி – கிரைய சொத்தின் புல எண் தெரியுமா?
பதில் – தெரியாது. நியாபகம் இல்லை.
7. கேள்வி – எவ்வளவு விஸ்தீரணம் இடம் என்று தெரியுமா?
பதில் – தெரியும். 75 செண்ட்கள்
8. கேள்வி – தாவா சொத்தின் நான்கெல்லை தெரியுமா?
பதில் – ஒரு புறம் மட்டும் தெரியும்.மற்ற 3புறம் தெரியாது.
ஒருபுறம் கோவில் இருக்கிறது.

9. கேள்வி – தாவா சொத்துள்ள கிராமத்திற்கு எத்தனை முறை சென்றிருப்பீர்கள்?
பதில் – வழக்கு வாய்தாவிற்கு வரும்போது செல்வேன் .அது தவிர வியாபார விசயமாக இந்த பக்கம் வரும்போது தாவா கிராமத்திற்கு செல்வேன்.
10. கேள்வி – தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பு இடத்தை பார்வையிட்டேனா?
பதில் – பார்வையிட்டேன். இடத்தை விற்றவர் வீட்டிற்கு சென்று அவர்களையும் அழைத்துகொண்டு பார்வையிட்டேன்.அவர்கள் 2 இடங்களை காட்டினார்கள் அதில் எனக்கு தாவா சொத்து பிடித்திருந்தது.
11.கேள்வி – 2 இடங்கள் காட்டியதாக சொல்வதில் மற்றொரு இடம் எங்கு அமைந்துள்ளது?
பதில் – ரோட்டிற்கு வலபுறமாக 2கிலோ மீட்டர் துாரத்தில் அமைந்துள்ளது.
12. கேள்வி – கிரைய ஆவணத்தில் தமிழில் எழுதப்பட்ட விவரம் உங்களுக்கு புரிந்ததா?
பதில் – எனக்கு அவ்வளவாக புரியாவிட்டாலும் நம்பிக்கையின்பேரில் கிரைய ஆவணம் ஏற்படுத்திகொண்டேன்
13.கேள்வி – வருமான வரி செலுத்துகிறிர்களா?
பதில் – செலுத்துகிறேன்.
14.கேள்வி – தாவா கிரைய ஆவணத்தில் கண்ட தொகை வருமான வரி கணக்கில் வருமா?
பதில் – வரும்.
15.கேள்வி – மேற்கண்ட வருமான வரி கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா?
பதில் – முடியும்.
16.கேள்வி – 1ம் பிரதிவாதி அசோக்கை உங்களுக்கு எத்தனை வருடமாக தெரியும்?
பதில் – 17 முதல் 18 வருடங்களாக தெரியும்.
17.கேள்வி – ஒரு வருடத்திற்கு நீங்களும் 1ம் பிரதிவாதியும் நெல் வியாபாரத்தில் எவ்வளவு தொகை சம்பாதிப்பீர்கள்?
பதில் – இரண்டு முதல் இரண்டரை கோடி வரை சம்பாதிப்போம்.
18. கேள்வி – மேற்கண்டவாறு 1ம் பிரதிவாதியுடன் நீங்கள் வியாபாரம் செய்து வந்ததற்கு வரவு செலவு கணக்கு உள்ளதா?
பதில் – உள்ளது.
19. கேள்வி – மேற்படி வரவு செலவு கணக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா ?
பதில் – வியாபாரம் என்பதால் என்னுடைய தணிக்கையாளரிடம் ஆலோசித்து விட்டுதான் தாக்கல் செய்ய முடியும்.
20. கேள்வி – தணிக்கையாளரிடம் ஆலோசித்து விட்டு எத்தனை நாட்களில் தாக்கல் செய்ய முடியும்?
பதில் – ஆலோசித்துவிட்டு 2 நாட்களில் தாக்கல் செய்கிறேன்.
21. கேள்வி – நீங்கள் தாக்கல் செய்த எதிர்வழக்குரை விவரம் தெரியுமா?
பதில் – தெரியும். வழக்கறிஞர் சொன்னார்.
22. கேள்வி – எதிர்வழக்குரையில் 1 ம் பிரதிவாதி உங்களுக்கு பணம் தரவேண்டியுள்ளது என்று சொல்லியிருக்கீற்களா?
பதில் – ஆமாம்.
23.கேள்வி – எதிர் வழக்குரையில் விதைநெல் பெற்ற வகையில் 1ம் பிரதிவாதியிடமிருந்து தொகை வரவேண்டியுள்ளது என்று சொல்லி இருக்கீறர்களா?
பதில் – சொல்லியிருக்கிறேன்.

24. கேள்வி – 1ம் பிரதிவாதி அசோக் உங்களிடமிருந்து விதைநெல் வாங்கி அதை இங்கு விற்றுவிட்டு அதற்குரிய தொகையை உங்களிடம் செலுத்துவது வழக்கம் என்பது உண்மையா?
பதில் – ஆமாம்.
25.கேள்வி – அதன்அடிப்படையில் 1ம் பிரதிவாதி அசோக்கிற்கும் உங்களுக்கும் இடையில் தொழில் ரீதியாக அன்னியோனியமாக உறவு உண்டா?
பதில் – உண்டு.
26. கேள்வி – தாவா கிரைய ஆவணத்தில் 1ம் பிரதிவாதி அசோக் சாட்சி கையெழுத்து போட்டாரா?
பதில் – போட்டார். மொத்தம் 2 பேர் போட்டார்கள்..
27. கேள்வி – சாட்சி கையெழுத்து போட்ட மற்றொரு நபர் பெயர் என்ன?
பதில் – சமுத்திரால ரமணாராவ் என்ற கரீம் நகர் வாசி போட்டார்.
28. கேள்வி – தாவா கிரய ஆவணத்தில் கண்ட சாட்சிகளை வழக்கில் சாட்சிகளாக விசாரிக்க முடியுமா?
பதில் – முடியும்.
29.கேள்வி – தாவா வாதி ராஜாமணிக்கும் உங்களுக்கும் வியாபார ரீதியாக சம்பந்தம் இல்லை என்பது உண்மையா?
பதில் – ஆமாம்.
30.கேள்வி – தாவா கிரைய ஆவணம் 1ம் பிரதிவாதி உங்களுக்கு தர வேண்டிய தொகைகாக ஏற்படுத்தபட்டது என்றாலும் ராஜாமணிக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றால் என்ன சொல்கிறீர்கள்?
பதில் – அது தவறு. ரொக்கமாக பணம் கொடுத்து கிரையம் வாங்கினேன்.
31.கேள்வி – தாவா சொத்தை நீங்கள் அனுபவம் செய்து வருவதை காட்ட வருவாய் துறை ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா?
பதில் – இல்லை. வருவாய் துறையில் நாங்கள் ஆவணங்கள் பெற முடியாமல் வாதி தரப்பில் தடுக்கிறார்கள்.
32.கேள்வி – வருவாய் துறையில் ஆவணங்களை பெற மனு தாக்கல் செய்துள்ளீர்களா?
பதில் – செய்துள்ளேன்.
33.கேள்வி –வருவாய் துறையில் நான் தாக்கல் செய்த மனுவில் உத்தரவு எதுவும் பிறபித்தார்களா?
பதில் – உத்தரவு எதுவும் பிறபிக்கபடவில்லை.
34.கேள்வி – நான் வருவாய் துறையில் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா?
பதில் – தேடிபார்த்து தாக்கல் செய்கிறேன்.
35.கேள்வி – வழக்கிற்கு பிறகாவது தாவா சொத்தை பொறுத்து பட்டா எதுவும் வாங்கியிருக்கீற்களா?
பதில் – வாங்கவில்லை. வழக்கு போட்டதால் பட்டா தரமுடியாது என்று சம்பந்தபட்டதுறை சொல்லிவிட்டார்கள்.
36.கேள்வி –எந்த வருடம் நீங்கள் பட்டா கேட்டீற்கள்? எந்த வருடம் மறுத்தார்கள்?
பதில் – சுமாராக 2016 ம் வருடம் மனு கொடுத்தேன் .

37.கேள்வி – நீங்கள் பட்டா கேட்டு மனு கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – நான் மனு கொடுத்தது 100 சதவீதம் உண்மை.

38.கேள்வி – தாவா சொத்திற்கு சொத்துவரி செலுத்தியுள்ளீர்களா?

பதில் – வரி செலுத்த சென்றபோது பட்டா வராததால் வரி செலுத்த முடியாது என்று சொல்லிவிட்டார்கள்.

39.கேள்வி – வரி செலுத்த சென்றதாக நீங்கள் சொல்வது பொய் என்றால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – இல்லை நான் பொய் சொல்லவில்லை.உண்மைதான் சொல்கிறேன்.

40.கேள்வி – நீங்கள் சொத்தை கிரையம் வாங்கிய வருடம் தாவா சொத்தில் என்ன இருந்தது?

பதில் – யுகளிப்டஸ் மரங்கள் இருந்தது.

41.கேள்வி – தற்போது தாவா சொத்தில் யுகளிப் மரங்கள் உள்ளதா?

பதில் – என்னிடம் கிரையம் விற்றவர்கள் கிரையம் விற்றாலும் மரத்தை அவர்கள் தான் அறுத்து கொள்வதாக சொன்னதன் பேரில் வெட்டி எடுத்து சென்றார்கள். தற்போது தாவா சொத்தில் யுகளிப்ஸ் மரங்கள் இல்லை.

42.கேள்வி – நீங்கள் சொல்வது தவறு .தற்போதும் தாவா சொத்தில் வாதி பயிரிட்ட யுகளிப்ஸ் மரங்கள் உள்ளது என்றால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – தற்போது தாவா சொத்தில் யுகளிப்ஸ் மரங்கள் எதுவும் இல்லை. அவ்வாறு இருந்தால் நானே கொடுக்க தயாராக இருக்கிறேன்.

43.கேள்வி – 1ம் பிரதிவாதி அசோக் எனக்கு தரவேண்டிய தொகைக்கு பாதுகாப்புகாக தான் தாவா கிரைய ஆவணம் ஏற்படுத்தபட்டது என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – அப்படியல்ல. அசோக் எனக்கு தரவேண்டிய தொகை கோடிக்கு மேல் இருக்கிறது. ஆனால் தாவா கிரைய ஆவணம் நான் 40,000 ற்கு தானே வாங்கினேன்.

44.கேள்வி – தாவா சொத்து மதிப்பு மிக்க சொத்து என்றாலும் நீங்களும் 1 ம் பிரதிவாதியும் மோசடியாக வாதியை ஏமாற்றி தாவா கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளீர்கள் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – அப்படியல்ல. வாதியும் அவரது கணவரும் கிரைய தொகையை வாங்கி கொண்டு சார்பதிவாளர் அலுவலத்திற்கு வந்துதான் கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுத்தார்கள்.

45.கேள்வி – வாதி யின் கணவரிடம் நீங்கள் தாவா கிரைய ஆவணத்தில் சாட்சி கையெழுத்து வாங்கவில்லை என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – ஆமாம். வாங்கவில்லை.

46.கேள்வி – நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு. வாதியும் அவரது கணவரும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை.என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – சரியல்ல. அவர்கள் நேரடியாக சார்பதிவாளர்அலுவலத்திற்கு வந்து தான் ஆவணம் பதிவு செய்யப்பட்டது.

47.கேள்வி – உங்களுக்கு வேண்டபட்ட 1ம் பிரதிவாதியையும் உங்கள் மாநிலத்தை சேர்ந்த நபரிடம் மட்டும் சாட்சி கையெழுத்து வாங்கியிருப்பதிலிருந்து வாதியின் கணவர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வரவில்லை என்பது தெளிவாகிறது என்றால் என்ன சொல்கிறீர்கள்.

பதில் – அவர் சார்பதிவாளர் அ்லுவலகத்திற்கு வந்ததற்கு என்னிடம் ஆதாரம் இருக்கிறது. அதை நிரூபிக்க தயாராக இருக்கிறேன்.

48. கேள்வி – தாவா கிரைய ஆவணம் எத்தனை பக்கங்கள் கொண்டது என்று தெரியுமா?

பதில் – தெரியாது.

49.கேள்வி – தாவா கிரைய ஆவணத்தில் எழுதிய பத்திர எழுத்தரை தெரியுமா ?

பதில் – பத்திர எழுத்தரை அன்று ஒரு நாள் மட்டும் தான் பார்த்தேன்.அதனால் எனக்கு சரியாக தெரியாது. சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே தான் பத்திர எழுத்தர் அலுவலகம் இருந்தது.

50.கேள்வி – நீங்கள் 1ம் பிரதிவாதி அசோக் மற்றெரு சாட்சி சமுத்திரரமணாராவ் ஆகியோர் கூட்டு சதி செய்து வாதியை மோசடி செய்ய தாவா கிரைய ஆவணத்தை ஏற்படுத்தி உள்ளீர்கள் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – நீங்கள் சொல்வது சரியல்ல.

51.கேள்வி – உங்களுக்கு சொந்தமான நெல் சுத்தகரிக்கும் நிலையம் தமிழ்நாட்டில் இல்லை என்றால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – ஆமாம். எனக்கு சொந்தமான நெல் சுத்திகரிக்கும் நிலையம் தமிழ்நாட்டில் இல்லை.

52.கேள்வி – நீங்கள் நெல் சுத்திகரிக்கும் நிலையம் நடத்துவதற்கு ஆவணம் உண்டா?

பதில் – உண்டு.ஆந்தராவில் நடத்துவதற்கு உண்டு.

53.கேள்வி – மேற்கண்ட நெல்சுத்திகரிப்பு நிலையம் நடத்துவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா?

பதில் – முடியும்.

54.கேள்வி – தாவா கிரைய ஆவணத்தில் கண்ட சாட்சிகளை விசாரித்தால் தான் தாவா கிரைய ஆவணம் அதில் கண்ட கிரைய தொகைகாக ஏற்பட்டதா? இல்லையா? என்பது தெரியவரும் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – அதை நான் ஏற்றுகொள்கிறேன். ரமணாராவ் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை என்னால் சாட்சியம் அளிக்க அழைத்துவர முடியும்.அசோக் இந்த ஊரை சேர்ந்தவர் என்பதால் அவரை வாதி தரப்பில் அழைத்து வரலாம்.

55.கேள்வி – தாவா கிரைய ஆவணத்தை 1ம் பிரதிவாதி அசோக் தான் தயார் செய்து உங்களிடம் கையெழுத்து வாங்கினார் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – அசோக் உடன் இருந்தார் ஆனால் வாதி மற்றும் அவர் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து தான் கிரைய ஆவணம் ஏற்படுத்தபட்டது.

56.கேள்வி – நீங்கள் சொல்வது முற்றிலும் தவறு.நீங்களும் அசோக்கும் சேர்ந்து தான் தாவா கிரைய ஆவணத்தை மோசடியாக உற்பத்தி செய்தீர்கள் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – சரியல்ல.

57.கேள்வி – தாவா கிரைய ஆவணம் தகுந்த மறுபயனுக்கு ஏற்படுத்த பட்ட ஆவணம் இல்லை. என்றாலும் கொடுத்த கடனுக்கு பாதுகாப்பிற்காக ஏற்படுத்தபட்ட ஆவணம் என்று சொன்னால் என்ன சொல்கிறீர்கள்?

பதில் – விற்கிரையம் தான் செய்யபட்டது.நான் வாங்கி கொண்டேன் .

**மறுவிசாரணை இல்லை.**

( சாட்சியிடம் கேள்விகள் தெலுங்கில் மொழிபெயர்க்கபட்டு அவர் சொன்ன பதில்கள் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கபட்டு சாட்சியம் பதிவு செய்யபட்டது.)

மேற்படி வாக்குமூலம் சாட்சிக்கு தெலுங்கு மொழியில் மொழிபெயர்த்து சொல்லபட்டு அவர் சரியென்று ஒப்புகொண்டபிறகு அவரிடம் கையெழுத்து பெறபட்டது.

(I Mr.K. Ramesh En.No 319/1991. certified that the questions put to the witness were translated into Telugu and the answers he gave were translated into Tamil and the testimony was recorded in above way and deposition was read over to the witness in Telugu and he and admitted by him to be correct.)